www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

Tsi12Eco

தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்

மூன்றாம் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2023

வகுப்பு 12

கால அளவு: 3.00 மணிநேரம் **பொருளியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

**பகுதி - அ**

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்!** **20×1=20**

1) ஒரு பொருளாதார அமைப்பில் காணப்படுவது?
   a) உற்பத்தி துறை b) நுகர்வு துறை
   c) அரசு துறை d) மேலே கூறப்பட்ட அனைத்தும்
2) பகிர்வில் சமத்துவத்தை கடைப்பிடிக்கின்ற பொருளாதார அமைப்பு ----- ஆகும்.
   a) முதலாளித்துவ அமைப்பு b) உலகமயத்துவ அமைப்பு
   c) கலப்பு பொராளாதார அமைப்பு d) சமத்துவ பொருளாதார அமைப்பு
3) GNP = ______ + வெளிநாட்டிலிருந்து வரும் நிகர காரணி வருமானம்
   a) NNP b) NDP c) GDP d) தனிநபர் வருமானம்
4) தொன்மை கோட்பாட்டின்படி, வட்டி வீதம் ------க்கான வெகுமதி
   a) முதலீடு b) தேவை c) மூலதனம் d) சேமிப்பு
5) கீன்ஸின் வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் கோட்பாட்டில் ------ பொருளாதார மந்த நிலைக்கு காரணமாக உள்ளது?
   a) குறைவான உற்பத்தி b) அதிக தேவை c) நெகிழ்வற்ற அளிப்பு
   d) உற்பத்தி திறன் ஒப்பிடும் போது மிகக் குறைந்த அளவு மொத்த தேவை
6) $M_1$ மற்றும் $M_2$ ஆகிய இரண்டிற்க்கும் உள்ள வித்தியாசம்
   a) அஞ்சலக அனைத்து வைப்புகள் b) அஞ்சலக சேமிப்பு வங்கியின் சேமிப்பு வைப்புகள்
   c) வங்கியின் கால வைப்புகள் d) காகிதப்பணம்
7) தேக்க வீக்கத்தில் பண வீக்க விகிதத்துடன் இணைந்திருப்பது
   a) தேக்கம் b) வேலைவாய்ப்பு c) உற்பத்தி d) விலை
8) கடைசி நேரத்தில் உதவும் உற்ற நண்பன் என்ற பணியினைச் செய்வது
   a) மைய வங்கி b) வணிக வங்கிகள் c) நிலவள வங்கிகள் d) கூட்டுறவு வங்கிகள்
9) ஏ.டி.எம். (ATM) என்பதன் விரிவாக்கம் என்ன?
   a) தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் b) சரி செய்து பணம் வழங்கும் இயந்திரம்
   c) தானாக பணம் வழங்கும் முறை d) எந்த நேரமும் பணம் (Any Time Money)
10) புதிய பன்னாட்டு வாணிபக் கோட்டுபாடு எதன் அடிப்படையில் அமைந்தது?
   a) முழுமைச் செலவு b) ஒப்புமைச் செலவு
   c) உற்பத்திக் காரணி கோட்பாடு d) எதுவுமில்லை
11) அயல்நாட்டு செலுத்துநிலை உள்ளடக்கிய இனங்கள்
   a) புலனாகும் பொருட்கள் மட்டும் b) புலனாகாத பணிகள் மட்டும்
   c) அ மற்றும் ஆ d) பண்ட வாணிபம் மட்டும்
12) கீழ்கண்ட நாடுகள் எது சார்க் அமைப்பின் உறுப்பினர் இல்லை
   a) இலங்கை b) ஜப்பான் c) பாகிஸ்தான் d) பூடான்
13) ஆடம்ஸ்மித்தால் கூறப்படாத புனித வரிவிதிப்பு விதி எது?
   a) சமத்துவம் விதி b) நிச்சயத்தன்மை விதி
   c) வசதி விதி d) எளிமை விதி
14) கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது இந்தியாவின் பெரிய பற்றாக்குறையாக இருக்கும்?
   a) வருவாய் பற்றாக்குறை b) வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை
   c) நிதிப்பற்றாக்குறை d) முதன்மைப் பற்றாக்குறை
15) சுற்றுச் சூழல் பொருட்கள் என்பவை ______
   a) சந்தைப் பொருட்கள் b) சந்தையிடாப் பொருட்கள்
   c) இரண்டும் d) மேற்சொன்ன எதுவுமில்லை
16) உலக வெப்பமயமாகுதல் ______ என்றும் குறிப்பிடப்படுகிறது
   a) சூழலியல் மாறுபாடு b) பருவநிலை மாறுபாடு
   c) வளிமண்டல மாறுபாடு d) மேற்சொன்ன எதுவுமில்லை
17) எம்.என்.ராய் வழங்கியத் திட்டம் கீழ்கண்டவைகளில் எது?
   a) காங்கிரஸ் திட்டம் b) மக்கள் திட்டம் c) பாம்பே திட்டம் d) இவை எதுவுமில்லை
18) நீண்ட காலத் திட்டத்தின் மற்றொரு பெயர்
   a) மேம்பாட்டுத் திட்டம் b) மேம்பாடு இல்லாத திட்டம்
   c) முன்னோக்குத் திட்டம் d) முன்னோக்கமற்ற திட்டம்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

19) உடன்தொடர்புக்கெழு γ-ன் அளவு எந்த எல்லைக்குள் இருக்கும்
a) 0 மற்றும் 1 b) −1 மற்றும் 0 c) −1 மற்றும் +1 d) −0.5 மற்றும் +0.5

20) பொருளாதார அளவையியல் என்பது எதன் இணைப்பு?
a) பொருளியல் மற்றும் புள்ளியல்
b) பொருளியல் மற்றும் கணிதம்
c) பொருளியல் கணிதம் மற்றும் புள்ளியல்
d) மேற்சொன்ன எதுவுமில்லை

பகுதி - ஆ

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளி:** **7×2=14**

21) முதலாளித்துவம் என்றால் என்ன?
22) GNPக்கும் NNPக்கும் உள்ள தொடர்பினை எழுதுக.
23) தற்போதுள்ள சூழலில் ஆள் குறைப்பிற்கான காரணத்தை தருக.
24) முடுக்கி வரையறு.
25) தேக்க வீக்கம் என்றால் என்ன?
26) பன்னாட்டுப் பொருளியல் என்றால் என்ன?
27) தடையற்ற வாணிகப் பகுதி என்றால் என்ன?
28) முதன்மை பற்றாக்குறை என்றால் என்ன?
29) மொத்த நாட்டு உற்பத்தி என்றால் என்ன?
30) உடன் தொடர்பு என்பதை வரையறு.

பகுதி - இ

**III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **7×3=21**

31) காரணி செலவில் NNP குறிப்பு தருக.
32) தொன்மையியத்தையும் கீன்ஸியத்தையம் ஒப்பீடு (ஐந்து)
33) பெருக்கி கருத்தின் குறைபாடுகளைக் குறிப்பிடுக.
34) மீன் பணவீக்கம் பற்றி விளக்குக.
35) இந்திய தொழில் நிதிக்கழகத்தின் பணிகளைக் குறிப்பிடுக.
36) ஆசிரியான் அமைப்பின் சாதனைகளை பட்டியலிடுக.
37) தனியார் நிதிக்கும் பொதுநிதிக்கும் உள்ள மூன்று ஒற்றுமைகளை எழுதுக.
38) குறிப்பு வரைக: (அ) பருவநிலை மாற்றம் (ஆ) அமில மழை
39) வறுமையின் நச்சு சுழற்சியை எப்படி தடுப்பது?
40) திட்டவிலக்கத்தினை காண்:
14, 22, 9, 15, 20, 17, 12, 11

பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **7×5=35**

41) அ) நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி. **(OR)**
ஆ) தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள் யாவை?

42) அ) வேலையின்மையின் வகைகளை விவரி. **(OR)**
ஆ) நுகர்வுச் சார்பின் அக மற்றும் புறக் காரணிகளை விளக்குக.

43) அ) இர்விங்ஃபிஷரின் பண அளவுக் கோட்பாட்டினை விளக்குக. **(OR)**
ஆ) பணத்தின் பணிகளை விளக்குக.

44) அ) நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக. **(OR)**
ஆ) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விளக்குக.

45) அ) அயல்நாட்டுச் செலுத்துநிலையின் கூறுகளை அட்டவனை வடிவில் விளக்குக. **(OR)**
ஆ) குறிப்பு எழுதுக: (அ) சார்க் (ஆ) பிரிக்ஸ்

46) அ) பொதுநிதியின் எல்லைகளை விவரி. **(OR)**
ஆ) மறைமுக வரியின் நன்மைகள் யாவை?

47) அ) பல்வேறு வகையானத் திட்டமிடலின் வகைகளை விவரி. **(OR)**
ஆ) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்ஸனின் ஒட்டுறவுக் கெழுவினை கண்டறிக.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேவை X | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
| விற்பனை Y | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |

----------